12ஆம் வகுப்பு

பதிவு எண்

# பொதுத்தேர்வு மே - 2022

PART - III

## பொருளியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:**

(1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ________.

(அ) 1947 (ஆ) 1950
(இ) 1948 (ஈ) 1951

**2.** சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட ______ ஆக இருக்கும்.

(அ) கிட்டத்தட்ட சமமாக (ஆ) அதிகமாக
(இ) சமமாக (ஈ) குறைவாக

**3.** மிதமான பணவீக்கம் ________ என்று அழைக்கப்படுகிறது.

(அ) தவழும் பணவீக்கம்
(ஆ) நடக்கும் பணவீக்கம்
(இ) தாவும் பணவீக்கம்
(ஈ) ஓடும் பணவீக்கம்

**4.** ஆர்.பி.ஐ.-ன் தலைமையகம் அமைந்துள்ள இடம் :

(அ) மும்பை (ஆ) டில்லி
(இ) பெங்களூரு (ஈ) சென்னை

**5.** ஜே.எம். கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.

(அ) மூலதனம்
(ஆ) நாடுகளின் செல்வம்
(இ) பொது நிதி
(ஈ) பொதுக் கோட்பாடு

**6.** சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது :

(அ) Y/C (ஆ) C/Y
(இ) C + Y (ஈ) C × Y

**7.** இரண்டாம்நிலை விவரங்களுக்கான ஆதாரம் _____.

(அ) வெளியிடப்பட்ட விவரங்கள்
(ஆ) வெளியிடப்படாத விவரங்கள்
(இ) மேற்சொன்ன இரண்டும் இல்லை
(ஈ) (அ) மற்றும் (ஆ)

**8.** J.B. சே ஒரு _________.

(அ) நவீன பொருளியலாளர்
(ஆ) புதிய – தொன்மை பொருளியலாளர்
(இ) புதிய பொருளியலாளர்
(ஈ) தொன்மை பொருளியலாளர்

**9.** அமில மழை ________ விளைவுகளில் ஒன்று.

(அ) நில மாசு (ஆ) காற்று மாசு
(இ) ஒலி மாசு (ஈ) நீர் மாசு

**10.** MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் :

(அ) ரிகார்டோ (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) மால்தஸ் (ஈ) J.M. கீன்ஸ்

**11.** ஒரு வணிக வங்கி செய்யும் சேவை :

(அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது
(ஆ) கடன் வழங்குவது
(இ) (அ) மற்றும் (ஆ)
(ஈ) மேற்சொன்ன எதுவும் இல்லை.

**12.** GDP குறைப்பான் = _________.

(அ) $\dfrac{\text{பணமதிப்பு NDP}}{\text{உண்மை NDP}} \times 100$

(ஆ) $\dfrac{\text{பணமதிப்பு GNP}}{\text{உண்மை GNP}} \times 100$

(இ) $\dfrac{\text{பணமதிப்பு NNP}}{\text{உண்மை NNP}} \times 100$

(ஈ) $\dfrac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**13.** ________ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலாவீத வருமானம் கண்டறியலாம்.

(அ) செலவு
(ஆ) உற்பத்தி
(இ) GNP
(ஈ) நாட்டின் மக்கள் தொகை

**14.** சேயின் சந்தை விதியின் எடுகோள் ________.

(அ) குறுகிய கால பகுத்தாய்வு
(ஆ) முழுவேலை நிலை நிலவும்
(இ) நிறைகுறை போட்டி
(ஈ) குறை வேலையின்மை

**15.** இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ________.

(அ) உள் வாணிகம்
(ஆ) உள்நாட்டு வாணிகம்
(இ) வெளி வாணிகம்
(ஈ) எவையும் இல்லை

**16.** புதிய மேம்பாட்டு வங்கி ________ அமைப்புடன் தொடர்புடையது.

(அ) சார்க் (ஆ) பிரிக்ஸ்
(இ) ஆசியான் (ஈ) டபிள்யூ.டி.ஓ.

**17.** பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை :

(அ) தேவை மற்றும் அளிப்பு
(ஆ) சொத்து மற்றும் நலம்
(இ) நுண்ணியல் மற்றும் பேரியல்
(ஈ) உற்பத்தி மற்றும் நுகர்வு

**18.** இந்திய அரசின் வங்கியாக செயல்படுவது :

(அ) ICICI
(ஆ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
(இ) இந்தியன் ரிசர்வ் வங்கி
(ஈ) நபார்டு

**19.** நவீன அரசு எனப்படுவது :

(அ) நலம் பேணும் அரசு
(ஆ) தலையிடா அரசு
(இ) காவல் அரசு
(ஈ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு

**20.** நிதி ஆயோக்கின் தலைவர் :

(அ) துணைக் குடியரசுத் தலைவர்
(ஆ) பிரதமர்
(இ) நிதி அமைச்சர்
(ஈ) குடியரசுத் தலைவர்

## பகுதி - II

**குறிப்பு :** ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் **வினா எண். 30**-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7 × 2 = 14**

**21.** பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.

**22.** GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.

**23.** ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?

**24.** "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?

**25.** வணிக வங்கிகள் என்பதனை வரையறுக்கவும்.

**26.** அந்நிய செலாவணி (FOREX) என்பதன் பொருள் என்ன?

**27.** "பொது வருவாய்" என்றால் என்ன?

**28.** உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறுக்கவும்.

**29.** புள்ளியியல் என்றால் என்ன?

**30.** உள்ளாட்சி அமைப்பின் வகைகள் யாவை?

## பகுதி - III

**குறிப்பு : ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7 × 3 = 21**

**31.** பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.

**32.** தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

**33.** கீழ்காண்பவற்றை சுருக்கமாக விவரிக்கவும்.

(அ) பருவகால வேலையின்மை
(ஆ) உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை
(இ) படித்தவர் வேலையின்மை

**34.** புள்ளியியலின் பணிகள் யாவை?.

**35.** பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

**36.** இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

**37.** நவீன அரசின் பணிகள் யாவை?

**38.** குறிப்பு வரைக :

(அ) பருவநிலை மாற்றம்
(ஆ) அமில மழை

**39.** வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக.

**40.** பெருக்கியின் வகைளை குறிப்பிடுக. அதன் பயன்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**7 × 5 = 35**

**41.** (அ) இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை வரைபடத்துடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும்.

**42.** (அ) முடுக்கி இயங்கும் விதத்தினை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரிக்கவும்

**43.** (அ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண்க.

14, 22, 9, 15, 20, 12, 11

**44.** (அ) பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறிப்பு எழுதுக.

(i) சார்க்

(ii) ப்ரிக்ஸ்

**45.** (அ) வரி விதிப்பு விதிகளை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?

**46.** (அ) மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டத்தை வரைபடத்துடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

**47.** (அ) இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பணத்தின் முதல் மற்றும் இரண்டாம் நிலை பணிகளை விளக்குக.

❁ ❁ ❁ ❁ ❁

## விடைகள்

## பகுதி - I

**1.** (ஆ) 1950

**2.** (ஆ) அதிகமாக

**3.** (அ) தவழும் பணவீக்கம்

**4.** (அ) மும்பை

**5.** (ஈ) பொதுக் கோட்பாடு

**6.** (ஆ) C/Y

**7.** (ஈ) (அ) மற்றும் (ஆ)

**8.** (ஈ) தொன்மை பொருளியலாளர்

**9.** (ஆ) காற்று மாசு

**10.** (ஈ) J.M.கீன்ஸ்

**11.** (இ) (அ) மற்றும் (ஆ)

**12.** (ஈ) $\frac{\text{பண மதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$

**13.** (ஈ) நாட்டின் மக்கள் தொகை

**14.** (ஆ) முழுவேலை நிலை நிலவும்

**15.** (இ) வெளி வாணிகம்

**16.** (ஆ) பிரிக்ஸ்

**17.** (இ) நுண்ணியல் மற்றும் பேரியல்

**18.** (இ) இந்தியன் ரிசர்வ் வங்கி

**19.** (அ) நலம் பேணும் அரசு

**20.** (ஆ) பிரதமர்

## பகுதி - II

**21.** பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலைவாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது. 'பேரியல் பொருளாதாரத்தை வருவாய் கோட்பாடு' எனவும் அழைப்பர்.

**22.** மொத்த நாட்டு உற்பத்தி (GNP) சந்தை விலையில் = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்

**23.** (i) இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும் குறைவான வேலை வாய்ப்பும் காணப்படுகின்றன.

(ii) கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**24.** (i) வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே "நுகர்வு சார்பு" அல்லது "நுகர்வு நாட்டம்" என்கிறோம்.

(ii) வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதிகரிக்கும்.

**25.** (i) வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர், பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடனை அளிக்கும் ஒரு நிதி அமைப்பு ஆகும்.

(ii) நீர்மை தன்மையை தக்கவைக்கும் பொருட்டு வணிக வங்கிகள் பெரும்பாலும் நீண்டகால கடன்களை அளிப்பதில்லை.

**26.** (i) ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள மற்ற நாடுகளின் பணமே அந்நிய செலாவணி என பொருள் கொள்ளலாம்.

(ii) ஒவ்வொரு நாட்டுக்கும் தனியான நாணயமும் நாணய வெளியீட்டு முறையும் உள்ளது. இவற்றை மற்ற நாட்டு பணமாக மாற்றும் செயல்முறைகளையும் விதிகளையும் மற்றும் அலுவலக அமைப்புகளையும் அந்நிய செலவாணி என்ற சொல் விரிவாக குறிக்கிறது.

**27.** பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக் கூடிய முறைகளான வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் பற்றியும், வரிக்கொள்கை, வரிவிகிதம், வரியின் பளு, வரியின் தாக்கம் மற்றும் அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

**28.** நிலம் மற்றும் நீர் உள்ளடக்கிய பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்ப நிலையே புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

**29.** (i) புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகழ்தகவுகளைப் பற்றிய அறிவியலாகும்.

(ii) புள்ளியியல் என்பது விவரங்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் விவரிப்பது என்று பல பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

**30.** **உள்ளாட்சி அமைப்பின் வகைகள்**

1. கிராம ஊராட்சி
2. மாவட்ட வாரியங்கள் அல்லது ஜில்லா அமைப்பு
3. நகராட்சி
4. மாநகராட்சி

## பகுதி - III

**31.** பொருளாதார அமைப்புகளை பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

(i) **வளர்ச்சி நிலை :** வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

(ii) **நடவடிக்கைகளின் முறை :** முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்.

(iii) **நடவடிக்கைகள் அளவு :** சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.

(iv) **செயல்படும் தன்மை :** நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.

(v) **செயல் பரப்பு தன்மை :** மூடிய மற்றும் திறந்த வெளி பொருளாதார அமைப்புகள்.

(vi) **முன்னேற்ற தன்மை :** பழமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்.

(vii) **தேசிய வருவாய் அளவு :** குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்.

**32.** (i) தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

(ii) தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**33.** அ. **பருவ கால வேலையின்மை :**

✦ ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.

✦ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி போன்றவை குறிப்பிட்ட வருடத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்கள் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது.

ஆ. **உடன்பாடில்லா வேலையின்மை :**

✦ உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

✦ உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (மகிழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது.

இ. **படித்தவர் வேலையின்மை :**

✦ சில நேரங்களில் படித்த கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



✦ இத்தகைய வேலையின்மைக்கு கற்றோரா் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை, அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல். இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

**34. புள்ளியியலின் பணிகள் :**

(i) புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.

(ii) இது பரந்த விவரங்களை சுருக்கித் தருகிறது.

(iii) இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.

(iv) இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.

(v) இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.

(vi) கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

**35.** (i) **ரொக்க வைப்பு விகிதம்** (Cash Deposit Ratio) **:**

இது பொதுமக்கள் கையில் வைத்திருக்கும் பணம் / வங்கி வைப்புக்களில் உள்ள பணம் என்ற விகிதத்தை குறிக்கும்.

(ii) **ரொக்க இருப்பு வைப்பு விகிதம்** (Reserve Deposit Ratio - RDR) **:**

"வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு மற்றும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்புகள்" என்ற விகிதம்.

(iii) **ரொக்க இருப்பு விகிதம்** (Cash Reserve Ratio CRR) **:**

"வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு / வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புகள்" என்ற விகிதம் ஆகும்.

(iv) **சட்டபூர்வ நீர்மை விகிதம்** (Statutory Liquidity - SLR) **:**

"வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துக்கள் / வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகள்" என்ற விகிதம் ஆகும்.

**36. இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளாவன :**

(i) இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது.


(ii) வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.

(iii) இறக்குமதி செய்யப்படும் மற்றும் இந்தியாவிலிருந்து வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்கான பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.

(iv) வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.

**37.** (i) நவீன அரசு நலம் பேணும் அரசாகும்.

(ii) நவீன அரசின் முக்கியப் பணிகளாவன




**38. (அ) பருவநிலை மாற்றம் :** வளிமண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்துகொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே "கால நிலை மாற்றம்" எனப்படும்.

**(ஆ) அமில மழை** (Acid Rain) **:**

(i) காற்று மாசுவின் விளைவே அமில மழை ஆகும்.

(ii) தொழிற்சாலைகள், வாகனங்கள், கொதிப்பான்கள் போன்றவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்தில் உள்ள நீர்த்துகள்களோடு இணையும்போது ஏற்படுகின்றது.

(iii) இந்த வாயுக்கள் நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு மற்றும் சல்பர் டிரை ஆக்ஸைடு, தண்ணீரோடு கலக்கின்ற போது சல்பரஸ் அமிலம், நைட்ரிக் அமிலம், சல்பியூரிக் அமிலம் போன்றவைகளாக மாறுகின்றது.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**39. வறுமையின் நச்சு சுழற்சி :**

நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பாக ராகனார் நர்க்ஸ் கூறுகிறார்.

**உதாரணமாக :**


(i) ஒரு ஏழையிடம் உண்பதற்கு போதுமான உணவு இல்லை-குறைவான உணவு அவருடைய நிலையை பலவீனப்படுத்திவிடும்.

(ii) பலவீனமாக இருப்பவரின் உழைப்பு குறைந்து அவர் குறைந்த வருமானம் ஈட்டுவார்.

(iii) வருமானம் குறைவாக இருந்தால் அவர் ஏழை. மேலும் அவருக்கு போதுமான உணவு இருக்காது. இந்த சூழல் தொடர்ந்து கொண்டே செல்லும். இந்த சுழற்சி வறுமையின் நச்சு சுழற்சி என்கிறோம். இதனை கீழ்கண்ட வரைபடம் விளக்குகிறது.

(iv) வறுமையின் நச்சு சுழற்சி தேவைப்பக்கத்திலிருந்தும், அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.

**வறுமையின் நச்சு சுழற்சி**




**40. பெருக்கியின் வகைகள் :**

(i) வரி பெருக்கி
(ii) வேலைவாய்ப்பு பெருக்கி
(iii) வெளிநாட்டு வர்த்தக பெருக்கி
(iv) முதலீடு பெருக்கி

**பெருக்கியின் பயன்கள் :**

(i) வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தை பெருக்கி சுட்டிக்காட்டுகிறது
(ii) வாணிப சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகின்றது.

## பகுதி - IV


**41. (அ) 1. இல்லத்துறை :**

(i) இல்லத்துறை தான் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்தி காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும்.

(ii) இல்லத்துறையானது அதற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருவாயை பெறுகிறது.

**2. நிறுவனத் துறை :**

(i) நிறுவனத்துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது.




(ii) இருதுறை பொருளாதாரத்தில் உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருவாய் மற்றும் பொருட்கள் வட்ட ஓட்டமாகவும் காணப்படும்.

(iii) வெளி வட்டமானது உற்பத்திகாரணிகள் மற்றும் பொருட்கள் பிரதிபலிக்கும் உண்மை ஓட்டமாகவும், உள் வட்டமானது காரணி விலை மற்றும் பொருள் விலையை குறிக்கும் பண ஓட்டமாகவும் காணப்படும்.

இங்கு $Y = C + I$

Y என்பது வருவாய்; C என்பது நுகர்வு; I என்பது முதலீடு.

**(அல்லது)**

**(ஆ) இலக்கணம் :** "உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் சதவிகிதத்தையும் கொண்ட நல்ல வாணிபக் காலங்களையும், குறைகின்ற விலைகளையும், மிகுகின்ற வேலையில்லாத் திண்டாட்ட சதவிகிதத்தையும் கொண்ட கெட்ட வாணிபக் காலங்களையும் உள்ளடக்கியது வாணிபச் சூழல் ஆகும்."


**-து.ஆ. கீன்ஸ்**

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



வணிகச் சுழற்சியின் கட்டங்கள்




**(i) பூரிப்பு கட்டம் (Boom) :**

1. நீண்ட கால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையை தாண்டுவது வணிகச் சூழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது.
2. பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.

**(ii) பின்னிறக்கம் (Recession) :**

1. வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கி திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம்.
2. நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள்.
3. பங்கு சந்தையில் விலை வீழ்ச்சியின் காரணமாக பெரும் அச்சம் உருவாகும்.

**(iii) மந்தம் (Depression) :**

1. மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும் நிறுவனங்கள் நட்டமடைவதும் மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலை வாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும்.
2. வணிகச் சுழற்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும்.

**(iv) மீட்சி (Recovery or Revival) :**

1. மந்த நிலைக்குப் பின் மீட்சி இடம் பெறுகிறது. இது மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும்.
2. பொருளாதார நடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன.
3. இதனால் தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து பொருளாதார நடவடிக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருவாய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**42. (அ) முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம் :**


ஒரு எளிமையான எடுத்துக்காட்டின் மூலம் முடுக்கியின் செயல்பாட்டை அறியலாம்.

(i) 1000 நுகர்வு பொருட்களை தயாரிப்பதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுவதாக எடுத்துக்கொள்வோம். 10 வருடங்கள் அந்த இயந்திரங்களின் வாழ்நாள் எனக் கொள்வோம். ஒவ்வொரு வருடமும் 10 எந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது. காரணம் நிலையான 1000 நுகர்வுப் பொருட்களை தயாரிப்பதற்காக இதனை மாற்றியமைக்கும் தேவை எனப்படுகிறது.

(ii) 10சதவீதம் அளவிற்கு (அதாவது 1000 லிருந்து 1100 ஆக) நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கிறது என வைத்துக் கொள்வோம். இதன் விளைவாக மேலும் 10 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திர தேவை 20 ஆகும்.(10 மாற்றியமைப்பதற்காக மற்றும் 10 அதிகரித்த தேவையை சந்திப்பதற்காக) இங்கே 10சதவீதம் நுகர்வு பொருட்கள் தேவையானது 100 சதவீதம் இயந்திரத்தின் தேவை அதிகரிக்கின்றது என்பது குறிக்கின்றது. (10 லிருந்து 20 வரை).

(iii) இறுதியாக ஒரு சிறிய நுகர்வு பொருட்களின் தேவையில் மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.

**முடுக்கியின் செயல்பாடு**




**வரைப்பட விளக்கம் :**

(iv) SS என்பது சேமிப்பு கோடு, II என்பது முதலீட்டு கோடு, $E_1$ புள்ளியில் பொருளாதாரம் $OY_1$ வருமானத்துடன் சமநிலையில் இருக்கிறது.

(v) சேமிப்பும் முதலீடும் $OI_2$ ல் சமநிலையாக உள்ளது.

இப்பொழுது முதலீடு $OI_2$ லிருந்து $OI_4$ ஆக அதிகரிக்கிறது. இது வருமானத்தை $OY_1$ லிருந்து $OY_3$ ஆக அதிகரிக்கிறது.

(vi) $E_3$ சமநிலை புள்ளியில் முதலீடு $I_2$ $I_4$ ஆக முழுவதுமாக வெளிப்புற காரணியில் அதிகரிக்கின்றது என்றால் வருமானம் $Y_1$ $Y_3$ ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கும்.

ஆனால் இவ்வரைபடத்தில் வெளிப்புற முதலீடு $I_2$ $I_3$ ஆகவும் தூண்டப்பட்ட முதலீடு $I_3$ $I_4$ ஆகவும் இருக்கிறது.

(vii) அதிகரித்த வருமானம் $Y_1$ $Y_2$ ஆனது பெருக்கியின் விளைவாலும் மற்றும் அதிகரித்த வருமானம் $Y_2$ $Y_3$ ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

**(அல்லது)**

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(ஆ) (1) **மக்களாட்சி திட்டமிடல் :**

திட்டங்களை தயாரித்து மற்றும் செயல்படுத்தலில் உள்ள அனைத்து நிலைகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல் ஆகும்.

(2) **சர்வாதிகாரத் திட்டமிடல் :**

சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின் படி ஒரே ஒரு திட்டமாக இருக்கும்.

(3) **மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் :**

மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில் அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

(4) **பரவலாக்கப்பட்ட திட்டமிடல் :**

பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலில் மைய அமைப்புகளின் கட்டுபாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை செய்யும்.

(5) **வழிகாட்டும் திட்டமிடல் :**

திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டமிடல் ஆகும்.

(6) **தூண்டும் திட்டமிடல் :**

திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை பல்வேறு நிதியியல் மற்றும் பணவியல் வழிமுறைகள் மூலம் ஊக்கங்கள் அளித்து, அதன் நடவடிக்கைகளை மக்களால் மேற்கொள்ளப்படுவதை தூண்டும் திட்டமிடல் என்கிறோம்.

(7) **குறுகிய காலத் திட்டம் :**

ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகிய காலத் திட்டம் ஆகும்.

(8) **நடுத்தரத் திட்டம் :**

மூன்றிலிருந்து ஏழு ஆண்டு காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும்.

(9) **நீண்டகால திட்டமிடல் :**

பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல்.

(10) **நிதித்திட்டமிடல் :**

திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதியை பண மதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித்திட்டமிடலாகும்.

(11) **பணிகள் திட்டமிடல் :**

ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல் பணிகள் திட்டமிடலாகும்.

(12) **கட்டமைப்புத் திட்டமிடல் :**

பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும்.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**43. (அ)**

**(1) மூலதன திரட்சி :**

(i) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததான மூலதன திரட்சியில் வங்கிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

(ii) வணிக வங்கியானது தனது வங்கிப் பிரிவுகளின் கீழ் பரவலாக செயல்பட்டு பொதுமக்களின் சேமிப்பினை வைப்புகளாக திரட்டி அவைகளை உற்பத்தி நோக்கத்திற்காக கடன்களாக வழங்குகின்றன.

**(2) கடன் உருவாக்கம் :**

(i) வங்கிகளின் கடன் உருவாக்கம் மூலம் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிக நிதியைப் பெற்றுத் தருகிறது.

(ii) இதன்மூலம் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம், விற்பனை ஆகியவை ஏற்றம் பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருகின்றது.

**(3) அதிக உற்பத்தித்திறனை கொண்ட முதலீட்டை நோக்கி பணத்தை முறைப்படுத்துதல் :**

(i) வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தினை முதலீடு செய்கிறது.

(ii) ஒரு துறையில் செய்யப்பட்ட முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் அத்துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனை குறைத்துக்கொண்டு அதிக உற்பத்தி திறன் கொண்ட துறைகளுக்கு கூடுதலாக முதலீட்டுக்கான கடனை மடைமாற்றம் செய்கிறது.

**(4) சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்:**

(i) வங்கிகள் சரியான தொழிலையும், சரியான நபர்களையும் தெரிந்தெடுத்து கடன் வழங்குவதால் தொழிற்பெருக்கம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உதவுகின்றன.

(ii) எந்த பொருளுக்கு அதிக தேவை உள்ளதோ அந்த பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும், முன் பணங்களையும் வழங்குகிறது.

**(5) கடனை பணமாக்குதல் :**

வணிகத்தில் எழும் குறிப்பிட்ட காலக் கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன் மூலம் உற்பத்தி மற்றும் வணிக நடவடிக்கைகளில் சுணக்கம் ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது.

**(6) வேலை வாய்ப்பினை உருவாக்குதல் :**

வங்கிகள் தேசியமயமாக்கலுக்குப் பின் வங்கித் துறை பெருமளவு உயர்ந்து அதிக கிளைகள் திறக்கப்பட்டு கடன்பெருக்கத்தினைச் செய்வதால் வேலைவாய்ப்புகள் உருவாகிறது.

**(7) வங்கிகள் தொழில் முனைவினை ஊக்கப்படுத்துகிறது :**

(i) வணிக வங்கிகள் தொழில் முனைவினை ஊக்கப்படுத்தி வருகிறது. தொழில்முனைவு உருவாக்குவது மிகவும் சிக்கலான ஒரு நடைமுறை ஆகும்.

(ii) தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமானதாகவும் மற்றும் பொருளாதார ரீதியாக பயனளிக்கத்தக்க மிகச்சிறந்த திட்டங்களுக்கு வங்கிகள் 100 சதவிகித கடன்களை அளிக்கின்றன.

**(அல்லது)**

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(ஆ)

| வ. எண் | X | $X-\overline{X}$ | $(X-\overline{X})^2$ |
|---|---|---|---|
| 1 | 14 | (14 – 15) = – 1 | 1 |
| 2 | 22 | (22 – 15) = 7 | 49 |
| 3 | 9 | (9 – 15)= – 6 | 36 |
| 4 | 15 | (15 – 15)= 0 | 0 |
| 5 | 20 | (20 – 15)= 5 | 25 |
| 6 | 17 | (17 – 15)= 2 | 4 |
| 7 | 12 | (12 – 15)= – 3 | 9 |
| 8 | 11 | (11 – 15)= – 4 | 16 |
| | $\Sigma X = 120$ | | $\Sigma(X-\overline{X})^2 = 140$ |

$$\overline{X} = \frac{\sum X}{n}$$

$n = 8$

$$\overline{X} = \frac{120}{8} = 15 \qquad \therefore \overline{X} = 15$$

$$\sigma = \sqrt{\frac{\Sigma(X-\overline{X})^2}{n}} = \sqrt{\frac{140}{8}}$$

$$= \sqrt{17.5}$$

$$\therefore \sigma = 4.18$$

ஆகையால் திட்டவிலக்கம் $(\sigma) = 4.18$

**44. (அ)**

(i) உலக பொருளாதாரத்தின் அந்நிய நேரடி முதலீடு முக்கிய காரணியாகும்.

(ii) பன்னாட்டு வணிகம் மற்றும் அந்நிய நேரடி முதலீடு ஆகிய இரண்டும் நெருங்கிய தொடர்புடையது.

(iii) இந்தியா போன்ற வளரும் நாடுகளின் அந்நிய நேரடி முதலீடுகள் மூலம் இயற்கை வளங்கள் துறையான தோட்டத்துறையில் வியாபாரத்தின் அளவு அதிகரித்துள்ளது.

(iv) தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் மற்றும் வியாபாரத்தின் மூலம் வருமான பெருக்கம் ஆகியவற்றில் பங்கு வகிக்கிறது.

(v) அபிவிருத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான இறக்குமதிகளை எளிதாக்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த உதவுகிறது அதாவது மூலதன பொருட்கள், தொழில்நுட்ப அறிவு, கச்சா பொருள்கள், பற்றாக்குறையான பொருள்கள் போன்றன.

(vi) அந்நியச் செலாவணி பற்றாக்குறை, வேலை வாய்ப்பு உருவாக்க விருப்பம், பொருளாதார வளர்ச்சிக்கான வேகத்தை விரைவுபடுத்துதல் போன்ற காரணிகளை அந்நிய நேரடி முதலீடு ஊக்குவிக்கிறது.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(vii) பெரும்பாலான நாடுகள் இறக்குமதிக்காக அந்நிய மூலதனத்தை ஊக்குவிக்கின்றன.

(viii) ஒரு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் அந்நிய நேரடி முதலீட்டின் உண்மையான தாக்கம் வேறுபடலாம்.

(ix) IMF மற்றும் உலக வங்கி கொள்கைகளால் உருவாக்கப்படும் அமெரிக்க டாலர்களுக்கான தேவை, அமெரிக்க டாலர்களை தொடர்ந்து மதிப்பு பெறுவதற்கு உதவுகிறது.

**(அல்லது)**

**(ஆ) (i) தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு சங்கம் - சார்க் :-**

1. தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவக்கப்பட்ட அமைப்பு தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு ஆகும். இந்த நாடுகளின் பொருளாதார சமூக, பண்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்காகவும் மற்ற வளரும் நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் டிசம்பர் 8, 1985ல் அமைக்கப்பட்டது.
2. வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாகும்.
3. ஒப்பந்தத்தில் உறுப்பினர் நாடுகள் ஏற்றுக்கொண்ட பிரிவுகளில் ஒத்துழைப்பு கொடுத்து ஒன்று சேர்ந்து செயல்பட்டு பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு அடைவதே சார்க் அமைப்பின் அடிப்படை குறிக்கோள்.
4. முதல் உச்சி மாநாடு வங்காளதேசம் தலைநகரம் தாக்காவில் 1985ல் நடைபெற்றது. இரண்டாண்டுக் கொருமுறை உச்சி மாநாடு நடைபெறுகிறது. 20ஆவது உச்சி மாநாடு இலங்கையில் 2018ல் நடைபெற்றது.

**(ii) பிரிக்ஸ் நாடுகள் :**

1. வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப்பெயர் பிரிக்ஸ் ஆகும்.
2. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென் ஆப்பிரிக்கா, ஆகியவையே அதன் ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகள், இது 2010 வரை தென் ஆப்பிரிக்காவை உள்ளடக்காமல் பிரிக் என்று அழைக்கப்பட்டது.
3. பிரிக் என்ற சுருக்கப் பெயர் 2001ல் பயன்பாட்டுக்கு வந்தது.
4. பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜுலை 2018ல் நடைபெற்றது.
5. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனைகள் உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**45. (அ)** ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி நான்கு புனித வரி விதிப்புகள் உள்ளன. அவை,

**(1) செலுத்தும் திறன் பற்றிய விதி/சமத்துவ விதி :**

(i) மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப அரசானது வரி விதிக்க வேண்டும்.

(ii) ஏழை அல்லது நடுத்தர வர்க்கத்தினரை ஒப்பிடும் போது செல்வந்தர்கள் அதிக வரி செலுத்த வேண்டும்.

**(2) நிச்சயத்தன்மை விதி :**

(i) வரி வீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாத வகையில் அரசு வரியினை விதிக்க வேண்டும்.

(ii) அரசு தன்போக்கிற்கு வரியை விதித்தால் அது மக்களின் செலுத்தும் திறனை பாதிக்கும்.

**(3) வசதி விதி :**

வரி செலுத்துவோர்கள் வரியை சிரமமின்றி செலுத்தும் வண்ணம் வசதியான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

**(4) சிக்கன விதி :**

(i) அரசு வரிகளை வசூலிப்பதற்கு பணம் செலவிடுகிறது.

(ii) உதாரணமாக, வரிகளை வசூலிப்பவர்களுக்கு வசூலிப்பதற்கான செலவு வரிகளை விட அதிகமாக இருந்தால் அவை மோசமான வரிகளாகும்.

**(அல்லது)**

**(ஆ) (1) கழிவு நீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்:**

(i) பல இடங்களில் இருந்து வருகின்ற சாக்கடைத் தண்ணீர், கழிவு நீர் குப்பைகள், விவசாயக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுகின்றது.

(ii) இத்தகைய கழிவுகளில் உள்ள நச்சுப் பொருட்கள் தண்ணீரை மாசுபடுத்தி நச்சுத்தன்மை உள்ளதாக மாற்றுகின்றது.

**(2) திடக் கழிவுகள் குவித்தும் :**

திடப்பொருள் கழிவுகளை நீர் நிலையில் கொட்டுதல், நீர் நிலையுடன் கலந்துவிடுமாறு விட்டுவிடுதல்.

**(3) எண்ணெய் சிந்துதல் :**

கப்பல்களாலும் குறிப்பாக எண்ணெய்க் கப்பல்களாலும் எண்ணெய் கடல்நீரை மாசுபடுத்துகின்றது. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

**(4) அமில மழை :**

(i) காற்று மாசுவினால் அமில மழை ஏற்பட்டு நீர் மாசு எற்படுத்துகின்றது.

(ii) காற்று மாசுவில் உள்ள அமிலத் துகள்கள் நீருடன் கலந்து சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**(5) புவி வெப்பமடைதல் :**


புவி வெப்பமடைதல் காரணமாக நீரின் வெப்பநிலை அதிகரித்து நீர்வாழ் உயிரினங்களைப் பாதிக்கிறது

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**46. (அ) மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம் :**




இல்லம் மற்றும் நிறுவனத்துறைக்கு மேலாக அரசுத்துறை சேரும்போது மூன்று துறை மாதிரி (Three Sector Model) அமைகிறது. அரசானது இல்லத்துறை மற்றும் நிறுவனங்களில் வரி விதிக்கின்றனர். நிறுவனங்களிலிருந்து பொருள் மற்றும் பணிகளை வாங்குகின்றன. மேலும், இல்லத்துறையிலிருந்து உற்பத்தி காரணிகளையும் பெறுகின்றன. இதற்கு மாறாக, அரசானது ஓய்வு ஊதியம், நஷ்ட ஈடு, மானியம் ஆகிய சமூக பரிவர்த்தனைகளை இல்லங்களுக்கு வழங்குகிறது. அதுபோல, நிறுவனங்களிடமிருந்து வாங்கும் பொருள் மற்றும் பணிகளுக்கு பணமளிக்கிறது. மூன்று துறை பொருளாதார மாதிரியை வரைபடம் விளக்குகிறது.

மூன்று துறை மாதிரியில், தேசிய வருமானம் (National Income) என்பது நுகர்வுச் செலவு (Consumption Expenditure) முதலீட்டு செலவு (Investment Expenditure) மற்றும் அரசின் செலவு (Government Expenditure) ஆகியவற்றை கூட்டுவதால் அடையலாம்.

$$Y = C + I + G$$

இங்கு,

Y = வருவாய்; C = நுகர்வுச் செலவு; I = முதலீட்டுச் செலவு; G = அரசின் செலவு

**(அல்லது)**

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**(ஆ)**

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

**47.** **(அ)** ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. 1935 முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினை துவங்கியது.

**ரிசர்வ் வங்கியின் பணிகளாவன :**

(1) **பண அதிகார அமைப்பு :** இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்துநிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வங்கி அமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

(2) **காகிதப் பண வெளியீடு :** காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும்.

(3) **வங்கி உரிமங்கள் வழங்குபவர் :** வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22ன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும், இப்பணியினை ரிசர்வ் வங்கி செய்துவருகிறது.

(4) **அரசுக்கான வங்கி :** இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். இது அரசுகளுக்கு குறுகியகால கடன்கள், கடன் தொடர்பான சேவைகள், அரசின் கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்வது மேலும் வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளைச் செய்கிறது.

(5) **வங்கிகளின் வங்கி :**

- ✦ இது அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.
- ✦ வங்கிகளின் வைப்புகளை ஏற்று, மாற்று சீட்டுகளை மறு தள்ளுபடி செய்வதால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(6) **கடைசிநிலைக்கடன் ஈவோன் :** வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலில் இருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

(7) **தீர்வாக செயல்படுகிறது :**

(i) வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு சமன் செய்கிறது.

(ii) பரிவர்த்தனைக் கருவிகளை பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிவர்த்தனை தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

(8) **பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது:** பணவியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்துதல் மற்றும் தேசிய வருவாய் வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற முக்கிய குறியீடுகளை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

**(அல்லது)**

(ஆ) 1. **முதன்மை பணிகள் :**

அ. **பணம் ஓர் பரிவர்த்தனை கருவியாக:**

(i) இது பணத்தின் அடிப்படை பணியாகும்.

(ii) பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது மேலும், இது அனைத்து பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம் பெறுகிறது.

ஆ. **பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக:**

(i) பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

(ii) ஆகவே பணம் ஒரு பொது அளவுகோலாக பார்க்கப்படுகிறது.

2. **இரண்டாம் நிலை பணிகள் :**

அ. **பணம் ஒரு மதிப்பு நிலைக்கலனாக:**

(i) பொருட்களை சேமிப்பாக வைத்திருந்தால் அது நிலைத்திருக்காது.

(ii) ஆனால் பணம் கண்டுபிடிக்கப்பட்டபின் பொருள் மற்றும் பணியினை சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்துவிட்டன.

ஆ. **பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை :**

(i) பண்டமாற்று முறையில் கடன் வாங்குவதிலும் திருப்பிச் செலுத்துவதிலும் சிக்கல் நிறைந்திருந்தது.

(ii) பணிகளை திருப்பி செலுத்துவது என்ற சிக்கல் இருந்தது.

இ. **பணம் வாங்குதிறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவியாக :**

பொருளாதார வளர்ச்சியினை தொடர்ந்து பரிவர்த்தனை விரிவடைந்து செல்கிறது.

❉ ❉ ❉ ❉ ❉

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com